**செ. கு. எண்**: 274 **நாள்**: 25.12.2011

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 25.12.2011

இன்று (25.12.2011) திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிபூண்டியைச் சேர்ந்த 25 நபர்கள் விடுமுறையை முன்னிட்டு பழவேற்காடு ஏரியில் தனியாருக்கு சொந்தமான படகு ஒன்றில் சுற்றுலா சென்ற போது முகத்துவாரத்தில் அலை அதிகமாக இருந்ததால், படகு கவிழ்ந்ததில், படகில் பயணம் செய்த 22 நபர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற அதிர்ச்சி செய்தியைக் கேட்டு நான் ஆழ்ந்த வருத்தமும், மிகுந்த மன வேதனையும் அடைந்தேன்.

இப்படகு விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயர சம்பவம் குறித்து எனக்குத் தகவல் கிடைத்தவுடன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு. V.மூர்த்தி மற்றும் மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. B.V.ரமணா ஆகியோரை உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளில் ஈடுபடவும், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறவும் நான் அனுப்பி வைத்துள்ளேன்.

இத்துயரச் சம்பவத்தில் உடனடியாக மீட்புப் பணிகளில் ஈடுபட்டு, தேவையான துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு, உயிரிழந்தவர்களின் சடலங்களை அடையாளம் கண்டு அவரவர் குடும்பத்தினரிடம் ஒப்படைக்க திருவள்ளூர் மாவட்ட நிருவாகத்திற்கு நான் ஆணையிட்டுள்ளேன்.

மேலும், இப்படகு விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**